**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**

**கொழும்பு**

****************

**<u>ஊடக அறிக்கை</u>**

# <u>தெற்கிற்கான புதிய ரயில் சேவை ஆரம்பம்</u>

போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் கௌரவ அர்ஜுன ரணதுங்க, மற்றும் இந்திய உயர் ஸ்தானிகர் தரண்ஜித் சிங் சந்து ஆகியோர் இணைந்து மருதானை முதல் பெலியத்த வரையான “தக்ஷிண நகராந்தர சீக்ரகாமி” என்ற புதிய ரயில் சேவை ஒன்றினை இன்று ஆரம்பித்து வைத்தனர். கௌரவ அமைச்சர் மற்றும் உயர் ஸ்தானிகர் மருதானையிலிருந்து கோட்டை ரயில் நிலையம் வரை புதிய ரயிலில் பயணித்தனர்.

“தக்ஷிண நகராந்தர சீக்ரகாமி” புதிய ரயில் இந்தியாவில் தயாரிக்கப்பட்டு இந்திய கடன் திட்டங்களின் கீழ் M/s RITES Ltd. நிறுவனத்தால் இலங்கை புகையிரத திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டது . புதிய ரயில் பயணிகளுக்கான உயர் தரமான சேவையை கொண்டிருக்கின்றது. அத்துடன் வேகம் மற்றும் சொகுசு வசதிகள் மூலம் பயண அனுபவத்துக்கான அடுத்த மட்டத்தினை வழங்குகிறது . இந்த ரயிலின் இயந்திரம் மற்றும் பொறி முறைமையானது நவீனமயப்படுத்தப்பட்டிருக்கும் அதேவேளை ஆகக்குறைந்த பராமரிப்பு வசதிகளுடன் இயங்கும் வல்லமைகொண்டது. மேலும் இந்த ரயில் பெட்டிகள் ஒலி மற்றும் மாசு கட்டுப்பாட்டினை உறுதிப்படுத்துகின்றன . அத்துடன் ஜி .பி.எஸ் அடிப்படையிலான பயணிகள் தரவுகளுடன் கூடிய பொழுதுபோக்கு அம்சங்களையும் கொண்டுள்ளன. குளிரூட்டப்பட்ட ரயில் பெட்டிகளில் 360 பாகையும் சுழலும் ஆசனங்கள் இணைக்கப்பட்டுள்ளதுடன் கண்ணாடி தட்டுக்களுடனான அலுமினிய பொதிவைக்கும் ராக்கைகளும் உள்ளன.

இந்தியாவின் M/s RITES Ltd. நிறுவனத்துக்கும் இலங்கை புகையிரத திணைக்களத்துக்கும் இடையில் 2017 மார்ச்சில் கைச்சாத்திடப்பட்டிருந்த ஒப்பந்தத்துக்கு அமைவாக ஆறு ரயில்களும் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளன . கடனுதவி அடிப்படையில் கடந்த 10 மாதங்களில் இந்தியா இலங்கைக்கு 5 இயந்திரங்களையும் 15 சரக்கு ரயில் பெட்டிகளையும் வழங்கியுள்ளதுடன் மேலதிகமாக 35 சரக்கு ரயில் பெட்டிகளும் 5 இயந்திரங்களும் விரைவில் இந்தியாவால் இலங்கைக்கு வழங்கப்படவுள்ளன. இலங்கையில் ரயில் துறை அபிவிருத்திக்காக 1.3 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான கடன் உதவியினை இந்தியா இலங்கைக்கு வழங்குவதற்கு உறுதிபூண்டுள்ளது.

இந்த நிகழ்வில் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் திரு.எல்.பி.ஜயம்பதி இலங்கை புகையிரத சேவைகள் பொது முகாமையாளர் திரு.எம்.ஜே.டி.பெர்னான்டோ மற்றும் RITES Ltd இன் பொது முகாமையாளர் திரு. ஜி.ஏ.ஜிலானி ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

*************

கொழும்பு

24 செப்டெம்பர் 2019